**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எண்-III , தஞ்சாவூர்**

**முன்னிலை திரு.S. ராஜேஷ் கண்ணன், பி.ஏ., பி.எல்.,**

**நீதித்துறை நடுவர் எண்-III , தஞ்சாவூர்,**

**2026 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆம் நாள் வியாழக்கிழமை**

**சி.ஆர்.எம்.பி.எண்.64/2026**

******

சுனில் சர்மா, வயது 27/2026

த/பெ. சாலமன். ... மனுதாரர்/எதிரி

/ எதிர் /

அரசுக்காக,

காவல் உதவி ஆய்வாளர்,

அய்யம்பேட்டை காவல் நிலையம்,

குற்ற எண். 183/2026

U/s. 296(b), 118(1), 115(2), 351(3) BNS ... எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனு இன்று விசாரணைக்கு வந்தபோது. மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. திராவிடன், B.Com., LLB., அவர்கள் ஆஜராகியும், வாதுரை கேட்டும், அரசு தரப்பு ஆட்சேபனை பரிசீலனை செய்தும், வழக்கு ஆவணங்கள் பரிசீலணை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**உத்தரவு**

1. மனுதாரர்/எதிரி பிரிவு 480 BNSS ன் கீழ் பிணை கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2. கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மனுதாரருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. மனுதாரர் அப்பாவி. அரசு தரப்பில் சொல்லப்படுவதுபோல், மனுதாரர் எந்த குற்ற செயலும் செய்யவில்லை. மனுதாரருக்கு நிலையான முகவரி உள்ளது. மனுதாரருக்கு பிணை வழங்கும் பட்சத்தில் பிணைக்கு உரிய ஜாமின்தாரர்கள் வழங்கவும், இந்நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு நடக்கவும், மனுதாரர் தயாராக இருக்கிறார். எனவே மனுதாரர் சிறையில் இருந்து வரும் காலத்தை கருத்தில் கொண்டு அவருக்கு பிணை வழங்க வேண்டும் என்று வாதுரைத்தார்.

RAJESH KANNAN

Digitally signed by RAJESH KANNAN
Date: 2026.05.07 13:09:50 +1200

3. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபனை குறிப்பில் மனுதாரருக்கு பிணை வழங்கினால் அவர் தொடர்ந்து இது போன்ற குற்ற வழக்குகளில் ஈடுபடுவார் என்பதாலும், தொடர்ந்து நீதிமன்றத்தில் ஆஜராக மாட்டார் என்பதாலும், சாட்சிகளை மிரட்டி அச்சுறுத்தக்கூடும் என்பதாலும் இவ்வழக்கு சாட்சிகளை கலைக்க முயற்சிப்பார். எனவே மனுதாரருக்கு பிணை வழங்க ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. வழக்கு ஆவணங்கள் பரிசீலணை செய்து பார்க்கப்பட்டது. மனுதாரர் 01.05.2026 முதல் கடந்த 6 நாட்களாக சிறையில் இருந்து வருகிறார். மனுதாரருக்கு நிலையான முகவரி இருந்து வருகிறது. காயம்பட்ட நபர் மருத்துவமனையில் இருந்து சிகிச்சை பெற்று சென்றுவிட்டார். மனுதாரர் சிறையில் இருந்த காலத்தை கருத்தில் கொண்டும், இந்த வழக்கில் ஆரம்ப காலகட்ட புலன் விசாரணை முடிந்ததை கருத்தில் கொண்டும், இவ்வழக்கு சூழ்நிலை, குற்றத்தன்மை மற்றும் சங்கதிகளை கருத்தில் கொண்டும் மனுதாரருக்கு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் பிணை வழங்கி உத்தரவிடப்படுகிறது.

1. மனுதாரர்/எதிரி ரூ.10,000/-க்கு பிணைய ஆவணம் எழுதி கொடுக்க வேண்டும், மேலும் மனுதாரர் சார்பில் 2 பிணையதாரர்கள் தலா ரூ.10,000/- க்கு பிணையப் பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும்.
2. மனுதாரர்/எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் விசாரணைக்கு அழைக்கும் போது ஆஜராக வேண்டும் .
3. மனுதாரர் இவ்வழக்கு சாட்சிகளை கலைக்க முற்படக்கூடாது.
4. மனுதாரர் தலைமறைவாக கூடாது. முகவரி மாற்றம் இருந்தால் எதிர்மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும்.

இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யபட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJESH KANNAN

Digitally signed by RAJESH KANNAN
Date: 2026.05.07 13:09:59 +1200

நீதித்துறை நடுவர் எண்-III,

தஞ்சாவூர்.